# சென்னை மெட்ரோ ரயில் சேவை: 7 மாதத்தில் 94 லட்சம் பேர் பயணம்

**சென்னை, ஏப். 1:** கரோனா பொதுமுடக்க தளர்வுக்குப் பின்பு, சென்னையில் மெட்ரோ ரயில் சேவை தொடங்கப்பட்டு, 7 மாதத்தில் (செப்.7 முதல் மார்ச் 31 வரை) 93.68 லட்சம் பேர் பயணம் செய்து உள்ளனர்.

கரோனா பொதுமுடக்கம் காரணமாக, கடந்த ஆண்டு மார்ச் 4-ஆவது வாரத்தில் நிறுத்தப்பட்ட சென்னை மெட்ரோ ரயில் சேவை 5 மாதங்களுக்குப் பிறகு, கடந்த ஆண்டு செப்டம்பர் 7-ஆம் தேதி தொடங்கியது. மெட்ரோ ரயில் சேவை தொடங்கியபோது, குறைவான மக்கள்தான் பயணம் செய்தனர். பயணிகள் பாதுகாப்பாக பயணிக்கும் விதமாக, பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதால், பயணிகள் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து வந்தது.

மேலும், வண்ணாரப்பேட்டை-விம்கோ நகர் இடையே முதல்கட்ட மெட்ரோ விரிவாக்கப்பாதையில் மெட்ரோ ரயில் சேவை கடந்த பிப்ரவரி 14-ஆம் தேதி தொடங்கியது. இதையடுத்து, மெட்ரோ ரயில்களில் பயணிப்போர் எண்ணிக்கை மேலும் உயர்ந்துள்ளது.


(கோப்புப் படம்)

**93.68 லட்சம் பேர் பயணம்:** இந்நிலையில், சென்னை மெட்ரோ ரயில்களில் கடந்த ஆண்டு செப்டம்பர் 7-ஆம் தேதி முதல் நிகழாண்டில் மார்ச் 31-ஆம் தேதி வரை 7 மாதங்களில் 93 லட்சத்து 68 ஆயிரத்து 304 பேர் பயணம் மேற்கொண்டுள்ளனர். மெட்ரோ ரயில்களில் கடந்த ஆண்டு செப்டம்பர் 7-ஆம்தேதி முதல் டிசம்பர் வரை 31 லட்சத்து 52 ஆயிரத்து 446 பேர் பயணம் செய்தனர். நிகழாண்டில் ஜனவரி மாதத்தில் 13 லட்சத்து 43 ஆயிரத்து 695 பேரும், பிப்ரவரி மாதத்தில் 20 லட்சத்து 54 ஆயிரத்து 653 பேரும், மார்ச்சில் 28 லட்சத்து 17 ஆயிரத்து 510 பேரும் பயணம் செய்தனர். குறிப்பாக, மார்ச் 8-ஆம் தேதி ஒரு லட்சத்து ஆயிரத்து 163 பேரும் பயணம் மேற்கொண்டனர்.

**க்யூ-ஆர் குறியீடு முறை:** பயணிகளின் வசதிக்காக, க்யூ ஆர் குறியீடு முறை கடந்த செப்டம்பரில் தொடங்கப்பட்டது. இந்த முறையைப் பயன்படுத்தி, கடந்த ஆண்டு செப்டம்பர் முதல் நிகழாண்டில் மார்ச் வரை மொத்தம் 2 லட்சத்து 12 ஆயிரத்து 941 பேர் பயணம் மேற்கொண்டனர். இதுபோல, பயண அட்டை பயணச்சீட்டு முறையைப் பயன்படுத்தி 47 லட்சத்து 81 ஆயிரத்து 943 பேர் பயணம் செய்தனர்.

இது குறித்து சென்னை மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் கூறியது:

நிகழாண்டில் மார்ச் மாதத்தில், க்யூ ஆர் குறியீடு பயணச்சீட்டு முறையைப் பயன்படுத்தி 62,586 பேர் மெட்ரோ ரயில்களில் பயணம் செய்துள்ளனர். மேலும், பயணச்சீட்டு முறையை (Travel Card Ticketing System) பயன்படுத்தி 13 லட்சத்து 17 ஆயிரத்து 93 பேர் பயணம் செய்துள்ளனர்.

மெட்ரோ ரயிலில் பயணிப்பவர்களுக்கு க்யூ ஆர் குறியீடு (ணத இர்க்ங்) பயணச்சீட்டில் ஒருவழிப் பயண அட்டை, இருவழிப் பயண அட்டை, பலவழிப் பயண அட்டை ஆகியவற்றில் கடந்த செப்டம்பர் 11 முதல் 20 சதவீதம் தள்ளுபடி அளிக்கப்படுகிறது. மெட்ரோ ரயில் பயண அட்டைகளை பயன்படுத்தி பயணிக்கும் பயணிகளுக்கு நிகழாண்டில் பிப்ரவரி 22-ஆம் தேதி முதல் 20 சதவீதம் கட்டணத் தள்ளுபடி வழங்கப்படுகிறது என்றனர்.